Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 1, No.2, 2020, (74-83).

# மலேசிய இந்தியர்களிடையே குண்டர் கும்பல் சிக்கல்: எதிர்காலம் திரைப்படம் ஓர் ஆய்வு

# Gangsterism among the Malaysian Indians: a study on Ethirkalam Movie

**K.Silllalee**
Department of Modern Languages,
University Tunku Abdul Rahman, Kajang, Selangor, Malaysia.
silllalee@yahoo .com

**M. Rajantheran**
Department of Indian Studies,
University of Malaya, Kuala Lumpur, Malaysia.
rajantheran@gmail.com

**K.Matana**
Sekolah Jenis Kebangsaan Tamil Taman Tun Aminah,
Johor, Malaysia.
matana_k@yahoo.com

Received: 02 November 2020; Accepted: 19 November 2020; Published: 03 December 2020

**To cite this article (APA):** Silllalee, K., Rajantheran, M., & Matana, K. (2020). *மலேசிய இந்தியர்களிடையே குண்டர் கும்பல் சிக்கல்: எதிர்காலம் திரைப்படம் ஓர் ஆய்வு*. *Journal of Valartamil*, *1*(2), 74-83. https://doi.org/10.37134/jvt.vol1.2.7.2020

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol1.2.7.2020

**ஆய்வுச்சுருக்கம்:** *மலேசியத் தமிழ்த் திரைப்படத்துறையானது 1968-ஆம் ஆண்டு மு. பஹருதின் அவர்களால் தயாரிக்கப்பட்ட ரத்தப்பேய் எனும் திரைப்படத்தில் இருந்து தொடங்கியது. இது குறுகிய கால அளவைக் கொண்ட திரைப்படமே. அந்த வகையில் 1991-ஆம் ஆண்டு சுகன் பஞ்சாட்சரம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'நான் ஒரு மலேசியன்' எனும் திரைப்படமே மலேசியாவின் முதல் முழுநீளத்திரைப்படமாக வரலாற்றில் இடம் பிடித்தது. வர்த்தக அடிப்படையில் இத்திரைப்படம் தோல்வியைத் தழுவியதால் அடுத்த 13 ஆண்டுகளில் எந்த மலேசியத் தமிழ்த்திரைப்படமும் தயாரிக்கப்படவில்லை. இதன் பின்னர் 2005-ஆம் ஆண்டு பென்சில் எனும் திரைப்படம் மலேசியத் தமிழ்த்திரைப்பட வரலாற்றினை மீண்டும் முன்னெடுத்துச் செல்லத்தொடங்கியது. சுபாஷ் அவர்களின் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படம் மற்ற இளம் கலைஞர்களுக்கு இத்துறையில் ஈடுபட உத்தேகம் அளிக்கிறது. அதன் பின்னர் நீயா நானா, எதிர்காலம், ஆண்டாள், விக்ராந், மஞ்சரி என பல மலேசியத் தமிழ்த்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வெற்றியும் கண்டன. ஒரு திரைப்படத்தின் வெற்றியானது அதன் கதைக்கருவில் அடங்கியுள்ளது. அக்கதைக்கருவானது ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே நிலவும் சமகாலச் சிக்கல்களைச் சார்ந்திருந்தால் மக்களிடத்தில் பெரிய வரவேற்பைப் பெறும். இவ்வாறு அமைவுரும் திரைப்படங்கள் சமகால வாழ்க்கையின் வரலாற்று ஆவணங்களாக அமைவதுடன் ஒரு சமூகத்தின் பண்பாட்டுப் பதிவாகவும் நிலைபெறும். அந்த வகையில் மலேசிய இந்தியர்களிடையே நிலவும் சமகாலச் சிக்கல்களுள் ஒன்றான குண்டர் கும்பல் சிக்கலை விளக்குவதுதான் எதிர்காலம்*

*எனும் மலேசியத் தமிழ்த் திரைப்படம். இத்திரைக்கதையில் இச்சிக்கல் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதையும் அதன் உண்மை நிலை எவ்வாறு பொருந்தி இளையோர்களுக்குச் செய்தியைத் தருகிறது என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வு, தரவுப்பகுப்பாய்வின் ஹெர்மனுதிக்குக் கோட்பாட்டை ஆய்வு நெறியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

***கருச்சொற்கள்***: *மலேசியத் தமிழ்த்திரைப்படம், குண்டர் கும்பல், எதிர்காலம் திரைப்படம், சமூகவியல், குற்றவியல்.*

**Abstract:** The history of Malaysian Tamil movies began in 1968 with the short movie "*Ratta Peei*" by Mu. Bahruthin. Then, the first Malaysian full-length Tamil movie, "*Naan Oru Malaysia*" (I am a Malaysia) under the production and direction of Sugan Panjacharam, was released in 1991. Unfortunately, the film was unsuccessful, and its failure led to 13 years of drought in Malaysian Tamil movies. In the year 2005, the Malaysian Tamil film industry was revived again with the successful production of the movie "*Pencil*," which inspired the local movie producers to produce a succession of local Tamil films like "*Niiya Nana*", "*Ethirkalam*", "*Andal*", "*Vikranth*", and "*Manjari*", which were well-received by the local audience. The key to producing a successful film is to ensure that the film has a storyboard content reflecting society's contemporary issues, which will make the film a historical and cultural asset of a society. "*Ethirkalam*" was one such movie that discusses the critical issue of gangsterism among Malaysian Indians. This article aims to discuss the portrayal of gangsterism in "*Ethirkalam*" and the message it wants to convey to the Malaysian youths. This is a qualitative research conducted based on hermeneutics approach.

**Key words:** Malaysian Tamil Movies, Gangsterism, Movie entitle Ethirkalam, Socialogy, and Criminal offence

## ***முன்னுரை***

*திரைப்பட ஊடகமானது மனமகிழ்சாதனமாக மட்டுமல்லாமல் தற்காலத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே நிலைபெற்றுவிட்டது எனலாம் (Bordwell & Thompson, 2008). ஒரு சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையையும் அனுபவங்களையும் கண்ணாடி போலப் பிரதிபலித்து அதன் மூலம் அவர்களின் உணர்வுகளைத் தொட்டு, சிந்தனையைத் தூண்டிதத் தன் வசப்படுத்தும் வல்லமை கொண்டது திரைப்படம் (Paul Madsen, 1973). திரைக்கதைகளில் மனிதனின் வாழ்க்கைச் சூழல், போராட்டம், ஏமாற்றம், எதிர்பார்ப்புகள், தியாகம், அர்ப்பணிப்பு, கொள்கை எனப் பல்வேறு விடயங்கள் கதைக் கருக்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மனிதனின் அன்றாட வாழ்க்கையில் தோன்றும் இக்காட்சிகளில் ஈர்க்கப்படும் பார்வையாளன் தன்னையும் அறியாது தனது வாழ்க்கையை அக்கதையோடு தொடர்புப்படுத்திப் பார்க்கும் போது ஏதோ ஒரு வகையில் மனநிறைவு கொள்கிறான். சில நேரங்களில் அவனது கோபம், எழுச்சி, சிந்தனை மாற்றம் போன்றவற்றிற்கும் இது வித்திடுகின்றது. இதற்குச் சமூகத்தில் இருக்கும் உண்மை நிலைப்பாட்டைத் திரைப்படங்கள் கதைக் கருவாகக் கொண்டிருப்பதுவே காரணமாக உள்ளன (Michael Pyan & Melissa Lenas, 2012). மேலும், திரைப்படங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் போது அவை எத்தகைய ஆழ்ந்த கருப்பொருளைக் கொண்டுள்ளன என்பதும் அதனால் சமுதாயத்தில் எத்தகைய சிந்தனை மாற்றங்கள் தோன்றும் என்பதும் அறியப்படும்.*

## ***ஆய்வுச் சிக்கல்***

*பொதுவில் திரைப்படங்கள் சிறந்த மனமகிழ் சாதனங்களாகவே கருதப்படுகின்றன. சிறுகதை, நாவல், கவிதை போன்ற இலக்கியங்கள் கூறும் ஆழ்ந்த சிந்தனைப் பதிவுகளை வெளிப்படுத்தும் சாதனமாக இவை*

நோக்கப்படுவது இல்லை. திரைப்படங்கள் என்பன சமூகத்தில் விழிப்புணர்வையும் சிந்தனை மாற்றத்தையும் கொண்டுவரும் ஆற்றல் உடையவை என்று பெரிதாகக் கருதப்படுவதும் இல்லை. ஆயினும், இவை சமூக மறுமலர்ச்சி ஊடகம் என்றே திரைப்படத்துறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (Stephenson & Phelps, 1965).

மேலும், திரைப்படங்கள் சமூகத்தில் நிகழும் பல்வேறு அவலங்களையும் சுட்டிக்காட்டும் வல்லமையுடையன (Paul Madsen, 1973). இவ்வாறு காட்டப்படும் சமூக அவலங்களாவன மக்களின் மனத்தைத் தொடும் வகையில் காட்டப்படுமாயின் இது மனித சமுதாயத்தில் மாபெரும் சிந்தனைத் தெளிவையும் மாற்றத்தையும் கொண்டுவரலாம் (Goudlad, 1971). இச்சிந்தனையின் அடிப்படையில் 'எதிர்காலம்' எனும் மலேசியத் தமிழ்த் திரைப்படம் எவ்வாறு குண்டர் கும்பல் சிக்கலை முன்வைத்துள்ளது என்பதனையும், அதன் நம்பகத்தன்மையையும் ஆராய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 'எதிர்காலம்' திரைக்கதைச் சுருக்கம் & ஆய்வுக்கு இத்திரைப்படத் தேர்வு

'எதிர்காலம்' திரைப்படம் 2006-ஆம் ஆண்டு ஸ்ரீகுமார் என்பவரின் தயாரிப்பில் வெளிவந்தது. இதில் ஸ்ரீகுமார் கதாநாயகனாகவும் நடித்திருந்தார். இத்திரைப்படம் 3 மணி 4 நிமிடன் கால அளவைக் கொண்டது. இத்திரைப்படத்தில், கதிர் (கதாநாயகன்) எனும் இளைஞன் கல்லூரியில் படிக்கும் காலத்தில் தன்னுடன் படிக்கும் கமலேஷ் எனும் சக மாணவனுடன் அவ்வப்போது மோதலைச் சந்தித்து வருகிறான். கமலேஷ் ஒரு குண்டர் கும்பலுடன் தொடர்பிலிருந்ததால் கதிருக்கு அதிகம் தொல்லைகள் கொடுக்கிறான். இதனால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கதிரும் அவனது நண்பர்களும் தர்மா என்பவனுடைய குண்டர் கும்பலின் உதவியைப் பெற்று அதில் சேர்ந்து கொள்கின்றனர். இதனால் தர்மாவின் குண்டர் கும்பல் ஏவலில் அடிதடிகளில் ஈடுபட்ட கதிரும் அவனது நண்பர்களும் ஒரு முறை கேலிக்கை விடுதியில் ஏற்படும் சண்டையால் கைது செய்யப்படுகின்றனர். இக்காரணத்தல் இவர்கள் கல்லூரியில் இருந்து நீக்கப்படுகின்றனர். இந்தச் சூழலில் கதிரின் நண்பன் சீனு எதிரிகளின் குண்டர் கும்பலால் கொலை செய்யப்படுகிறான். இதன் பின்னர் மனம் திருந்திய கதிர் வேலைக்குச் சென்று தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முற்படுகின்றான். சில ஆண்டுகளுக்குப் பிறகு தனது தம்பியும் தர்மாவின் குண்டர் குப்பலால் கவரப்பட்டு அக்கும்பலில் அவன் ஈடுபடுவது அறிந்த கதிர் தன் தம்பியைக் காப்பாற்றுவதற்காகத் தர்மாவைக் கொலை செய்கிறான். இதனால் கதிருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. இவ்வாறாக இத்திரைப்படம் நிறைவடைகிறது. இத்திரைப்படம் மலேசிய இளைஞர்களிடத்தே நிலவும் குண்டர் கும்பல் பிரச்சனையை மையமிட்டு தயாரிக்கப்பட்டதால் குண்டர் கும்பல் பிரச்சனையை ஆய்வு செய்யும் இக்கட்டுரைக்கு இத்திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

இந்த ஆய்வுக் கட்டுரை இரண்டு நோக்கங்களை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவையாவன: -

1. எதிர்காலம் திரைப்படத்தில் குண்டர் கும்பல் சிக்கல் எவ்வாறு காண்பிக்கப்பட்டுள்ளது.
2. திரைப்படத்தில் காட்டப்படும் சிக்கல்களில் உண்மை நிலைமை யாது எனக் கண்டறிவது.

**ஆய்வின் அடைவு**

திரைப்படங்கள் இன்றளவும் மக்களிடையே மிகுந்த வரவேற்பை உடையவை. இவை பொழுதுபோக்குச் சாதனமாக மட்டுமல்லாமல் மக்களிடையே நிலவும் சமகாலச் சிக்கல்களையும் அதனால் விளையும் விளைவுகளையும் எளிதில் விளங்கும் வண்ணம் கொண்டு சேர்க்கும் ஆற்றல் உடையவை. அந்த வகையில் எதிர்காலம் திரைப்படம் முன்னெடுத்திருக்கும் குண்டர் கும்பல் சிக்கலானது மலேசிய இந்தியர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய முக்கியமான சிக்கலாகும். இத்திரைப்படத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் இப்பிரச்சனையை ஆய்வு செய்வதன் மூலம் இந்திய இளையோர்கள் குண்டர் கும்பல் சிக்கல் பற்றி நன்கு அறிந்து கொள்வதுடன், அதில் ஒருபோதும் சிக்கிக் கொள்ளாமல் விழிப்புடன் இருக்க வகை செய்யும்.

**ஆய்வுக் கோட்பாடு**

இந்த ஆய்வானது தரவுப்பகுப்பாய்வு பண்புசார் ஆய்வு (qualitative) நெறியைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பொதுவில் சமூகவியல், பண்பாடு, உளவியல் போன்றவற்றை ஆய்வு செய்வதற்கு இந்த நெறியே ஏற்புடையதாக விளங்குகிறது (Sabitha Marican, 2005). இந்தத் தரவுப்பகுப்பாய்வின் மூலம் ஆய்வுப் பொருளின் உள்ளடக்கக் கருத்துகளின் உண்மை நிலையைக் கண்டறிய இயலும் (Merrian, 2009). மேலும், சமூகவியலில் புதிய வரவாகிய திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்தற்கும் இத்தரவுப்பகுப்பாய்வே ஏற்ற நெறியாக விளங்குகிறது (Denzin & Lincoln, 2003). தற்போதைய ஆய்வும் திரைப்படத்துறையைச் சார்ந்ததாக விளங்குவதால் இந்த நெறி தற்போதைய ஆய்வுக்கு ஏற்புடையதாக உள்ளது.

தரப்பகுப்பாய்வு ஆய்வுமுறையானது விளக்கமுறைக்கு (interpretation) வழிவகுக்கிறது. இதன் மூலம் ஆய்வில் பெறப்பட்ட தரவுகள் யாவும் சூழல், கருப்பொருள், நோக்கம் ஆகியவற்றை முன்னிருத்தி விளக்கமுறையில் அணுகி ஆராயப்படும். அதன் மூலம் ஆய்வின் முடிவுகள் ஆதாரப்பூர்வமாக நிறுவப்படும் (Creswell, 2003). பொதுவில் விளக்கமுறைக்கும் ஹெர்மனதிக் (Hermenutic) கோட்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதால் இந்த ஆய்வில் இக்கோட்பாடும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டின் மூலம் தரவுகளை முறைப்படி சேகரித்தல், நெறிப்படுத்தி ஆய்வுக்கு உட்படுத்துதல், ஆய்வு முடிவைக் கண்டறிதல் போன்றவை நிகழ்வதால் ஆய்வு நோக்குநிலை தவறாமல் செல்லும் (Melissa Freeman, 2008).

*இந்த ஆய்வில் தரவுகளைச் சேகரிக்க இத்திரைப்படத்தின் குறுந்தட்டு, மடிக்கணினி திரைச்செயலி ஆகியன ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. திரைப்படத்தில் ஆய்வுக்குத் தொடர்புடைய திரைக்காட்சிகள் வரும்போது திரைப்படம் நிறுத்தி வைக்கப்பட்டு அக்காட்சிகள் தரவுகளாகக் குறிப்பெடுத்துக் கொள்ளப்படும். பின்னர் சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் பகுக்கப்பட்டு நூலக ஆய்வின் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும்.*

## ***எதிர்காலம் திரைப்படத்தில் குண்டர் கும்பல் காட்சிகளும் அதன் அவலங்களும்***

*குண்டர்கும்பல் என்பது குற்றச் செயலாகப் பட்டியலிடப்படுகிறது. இதில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்படுவர். இதனால், இதில் ஈடுபடுவோர் குற்றவாளிகளாகக் கருதப்படுவர். மேலும், இதில் ஈடுபடுவோர் அவர்சார்ந்த சமுதாயத்திற்கும் கெட்ட பெயரைரையும் கலங்கத்தையும் ஏற்படுத்துவர். பல்லின மக்கள் வாழும் மலேசிய நாட்டில் ஒரு செயலில் எந்த இனம் அதிகமாக ஈடுபடுகிறதோ அதைக் கொண்டு அந்த இனத்தை அடையாளப்படுத்தும் சமுதாயப் பார்வை உள்ளதாகக் கருதப்படுவதால் குண்டர் கும்பல் போன்ற சிக்கல்களும் ஓர் இனத்தின் அடையாளத்தைப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.*

*'எதிர்காலம்' மலேசியத் தமிழ்த்திரைப்படத்தில் குண்டர் கும்பல் பிரச்சனை இத்திரைக்கதையின் மையக்கருவாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும், கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இதனால் எவ்வாறு தங்களின் எதிர்காலத்தைத் தொலைத்து விடுகின்றனர் என்பதை மக்களுக்குக் குறிப்பாக இளையோர்களுக்கு அறிவார்ந்த போதனையாக முன்வைத்துள்ளது இத்திரைப்படம்.*

*குண்டர் கும்பலில் ஈடுபடுவோர் இக்குற்றச்செயலினால் போலீசாருக்குப் பெரும் பிரச்சனையாகவே விளங்குன்றனர். மேலும் குண்டர் கும்பலில் பள்ளி மற்றும் உயர்கல்விக்கூட மாணவர்கள் ஈடுபடுவது போலீசாருக்கும் மிகப்பெரிய சவாலாக இருப்பதை மறுக்க இயலாது (குணா, 2006). கல்வி அமைச்சின் அடிப்படைத் திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு 1999-ஆம் ஆண்டு பள்ளி மாணவர்கள் குண்டர் கும்பலில் ஈடுபடுதல் குறித்த கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அந்த ஆய்வில் அடைவாக 1560 பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மூன்றில் ஒரு பகுதி மாணவர்கள் குண்டர் கும்பலில் ஈடுபட்டிருப்பது அறியப்பட்டதுடன் அவர்களின் நிலை மிகவும் ஆபத்தான அல்லது குற்றம் சுமத்தப்படுவதற்கு எல்லா முகாந்திரமும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது (http://ww1.utusan.com.my).*

*இது வருந்தத்தக்க உண்மை நிலவரம். குண்டர் கும்பலைச் சார்ந்தவர்கள் தங்கள் கும்பல்களில் உறுப்பினர்களைச் சேர்க்கும் பொருட்டுப் பள்ளியிலும் கல்லூரியில் பயிலும் மாணவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுக்கு உதவுவது போல அவர்களை மயக்கித் தங்கள் கும்பல்களில் சேர்த்துக் கொள்கின்றனர். குண்டர் கும்பலைச் சார்ந்தவர்கள் பள்ளிகளில் பயிலும் மாணர்கள் சக மாணவர்களுடன் பிரச்சனைகளில் ஈடுபடும் போது அவர்களுக்கு ஆதரவளித்தல், பிரச்சனையைத் தீர்த்து வைத்தல் போன்றவற்றின் மூலமாக இவர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய உதவிகளினால் கவரப்படும் மாணவர்கள் இவர்கள் மீது நம்பிக்கை கொள்கின்றனர். குண்டர் கும்பலின் உதவியினால் உடன் பயிலும் சக மாணவர்கள் தங்களை எதிர்க்கத் துணிவதில்லை என்பதனால் தங்களைப்*

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நாயகர்களாகக் கருதிக் கொள்ளும் மாணவர்கள் இவர்களுடனான நட்பை வலுப்படுத்திக் கொள்ள இவர்களுடன் சேர்ந்து இறுதியில் இவர்களின் கைப்பாவையாக மாறுகின்றனர் *(Ragu Nelligan, 2002).*

இந்த அவலம் எதிர்காலம் திரைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தின் கதாநாயகன் கதிர் தனியார் கல்லூரியில் பயிலும் மாணவன். அதே கல்லூரியில் பயிலும் சக மாணவனான கமலேசுடன் மோதலை எதிர்கொள்கிறான். கமலேஷ் குண்டர் கும்பலுடன் தொடர்பில் உள்ளவன். அவனை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கும் சூழலில் தர்மா எனும் குண்டர் கும்பல் தலைவனின் உதவி கதிருக்குக் கிடைக்கிறது. இதனால் கதிர் கமலேஷை கல்லூரிப் பிரச்சனைகளில் தைரியமாக எதிர்கொள்கிறான். தர்மாவால் ஈர்க்கப்பட்ட கதிரும் அவனது கல்லூரி நண்பர்களும் தர்மாவின் குண்டர் கும்பலில் ஈடுபடுகின்றனர். காலப் போக்கில் இக்குண்டர் கும்பலின் கைப்பொம்மையாகிய கதிரும் அவனது நண்பர்களும் இக்குண்டர் கும்பலின் ஏவலின்படி அடிதடி, போதைப்பொருள் கைமாற்றுதல் போன்ற பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

1980-களில் குண்டர் கும்பலைச் சார்ந்தவர்கள் தங்கள் குண்டர் கும்பலில் ஆள் சேர்த்தல், வியாபாரம் செய்பவர்களிடத்தில் பாதுகாப்புக்காகத் தண்டல் எனும் பெயரில் பணம் வசூலித்தல், ஆள்மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற குற்றச்செயல்களில் மட்டுமே ஈடுபட்டு வந்தனர். ஆனால், தற்போது இதனையும் தாண்டி கொலை செய்தல், கொள்ளையடித்தல், அபாயகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துதல், பொதுமக்களைப் பயமுறுத்துதல், காயப்படுத்துதல், கற்பழித்தல், போதைப்பொருள் கடத்துதல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களே நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிக்க மூல காரணமாகவும் விளங்குகின்றனர் (**குணா**, 2006).

***அட்டவணை*** 1: மலேசியாவில் **2012-2014** வரையிலான குற்றச்செயல்களின் விபரம்**.**

| **எண்** | **குற்ற வகைமை** | **2012** | **2013** | **2014** |
|---|---|---|---|---|
| 1. | கொலை | 602 | 627 | 425 |
| 2. | கற்பழிப்பு | 2,964 | 2,718 | 1,951 |
| 3. | ஆயுதம் ஏந்திக் கும்பலாகக் கொள்ளையடித்தல் | 110 | 98 | 75 |
| 4. | ஆயுதமின்றிக் கும்பலாகக் கொள்ளையடித்தல் | 16,738 | 1,6647 | 1,1677 |
| 5. | ஆயுதம் ஏந்திக் கொள்ளையடித்தல் | 17 | 21 | 20 |
| 6. | ஆயுதமின்றிக் கொள்ளையடித்தல் | 3,275 | 3,565 | 2,742 |
| 8. | காயப்படுத்துதல் | 6,244 | 5,699 | 4,712 |
| 9. | திருடுதல் | 2,500 | 2,118 | 2,098 |
| 10 | வீடு புகுந்து திருடுதல் | 24,939 | 23,317 | 17,194 |
| 11. | வாகனத் திருட்டு | 71,981 | 70,847 | 50,835 |
| | மொத்தம் | 129,370 | 125,657 | 91,729 |

***மூலம்***: *Laporan Jenayah, Ibu Pejabat Polis, Bukit Aman.*

மேற்கண்ட அட்டவணை மலேசியாவில் 2012-2014 வரையில் நிகழ்ந்த குற்றச்செயல்களின் வகைமையையும் எண்ணிக்கையையும் சுட்டுகிறது. இதில் ஈடுபடுவோர் குண்டர் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்பதையும், தங்களின் வருவாய்க்காக இதனை இவர்கள் புரிகிறார்கள் என்பதையும் இவ்வாய்வறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. இக்குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட கைதிகளில் பெரும்பான்மையினர் சிறு வயது முதல் மிக மோசமான வாழ்க்கைப் பின்புலத்தை உடையவர்கள் என்பதும் மன அழுத்தத்திற்கு ஆளானவர்கள் என்பதும் ஆய்வில் அறியப்பட்டுள்ளது. தங்களின் வருமானத்திற்காக இவர்கள் இக்குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் *(Jesuthas, 2010)*. இதே நிலை 2006 திரையிடப்பட்ட எதிர்காலம் திரைப்படத்திலும் காட்டப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தில் கதிரும் அவனது நண்பனும் குண்டர் கும்பலில் ஈடுபடுவதற்கும் தந்தையின் அரவணைப்பின்மை, போதிய பொருளாதார வசதியின்மை போன்றவை காரணங்களாகத் காட்டப்பப்பட்டன. பாதுகாப்பு, பொருளாதார ஆதரவு போன்றவை கிடைத்ததும் இவர்கள் எளிதில் குண்டர் கும்பலால் ஈர்க்கப்பட்டதும், அதனைத் தொட்டு மற்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் மலேசிய இளையோர்கள் குண்டர் கும்பலில் ஈடுபடுவதற்கான காரணங்களை உள்ளபடி இத்திரைப்படத்தில் காட்டுவதாக அமைகின்றது.

**2013-**ஆம் ஆண்டு ஆகஸ்டு **28-**ஆம் நாள் உள்துறை அமைச்சு போதைப்பொருள் கடத்தல், கொலை செய்தல், கொள்ளையடித்தல், அபாயகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துதல், காயப்படுத்துதல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 49 குண்டர் கும்பல் பட்டியலை வெளியிட்டது *(http://www.sinarharian.com.my).*

மேலும், இந்தியர்களும் தங்களுக்கான குண்டர் கும்பலை இயக்கி வருவதுவும் இந்த ஆய்வில் அறியப்படுகின்றது. இந்த ஆய்வில் 1388 இந்தியர்களுக்கான குண்டர் கும்பல் இயங்கி வருவது அறியப்பட்டுள்ளது.

***அட்டவணை*** 2: 1993-1995 வரையில் மலேசியாவில் இயங்கி வந்த இந்தியக் குண்டர் கும்பல் எண்ணிக்கை

| **மாநிலம்** | **குண்டர் கும்பல் எண்ணிக்கை** |
|---|---|
| பினாங்கு | 433 |
| கெடா | 318 |
| நெகிரி செம்பிலான் | 180 |
| பேராக் | 139 |
| சிலாங்கூர் | 130 |
| குவாலாலும்பூர் | 116 |
| ஜொகூர் | 72 |
| மொத்தம் | 1388 |

மூலம்**: (**குணா**, 2006).**

இது இத்திரைப்படம் வெளியிடப்படுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முந்தைய தகவலாக இருந்த போதும் இத்திரைப்படம் தயாரிப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட தரவாக உள்ளது. மேலும், அப்போது இது போன்ற இந்திய குண்டர் கும்பல்கள் இந்திய இளைஞர்களைத் தங்கள் வசமாக்கித் தங்கள் கும்பல்களைப் பலப்படுத்திக் கொள்வதையே தங்கள் இலக்காகக் கொண்டுள்ளனர். ஆனால், இதுபோன்ற செயல்களால் தங்களின் எதிர்காலத்தைத் தொலைத்துக் கொள்வது இந்திய இளைஞர்கள்தான். ஏனெனில் இது போன்ற குண்டர் கும்பல், அடிதடி ஆகியவற்றில் ஈடுபடும் இளையோர் முதலில் தங்களின் கல்வியைத் தொலைக்கின்றனர். இதனால் இவர்களுக்கு நல்ல தொழில் அமைவதில்லை. கல்வி இருந்தாலும் இவர்களின் கடந்த காலம் இவர்களை எதிர்காலத்தில் வாழ விடுவதில்லை. அதிலும் போலீசாரால் கைது செய்யப்பட்டவர்களாயின் இவர்களின் எதிர்கால உத்தியோகம் என்பது கேள்விக்குறியே. இத்தகையோருக்குச் சமுதாயத்திலும் மரியாதை இருப்பதில்லை.

இந்நிலையிலிருந்து பெறப்பட்ட இத்தரவுகளை எதிர்காலம் திரைப்படம் நன்கு தனது திரைக்கதையில் சித்தரித்துள்ளது. இத்திரைக்கதையில் குண்டர் கும்பலிலும் அடிதடிகளிலும் ஈடுபட்டுப் போலீசாரால் கைதுசெய்யப்பட்ட கதிர் கல்லூரி நிர்வாகத்தாரால் இடைநீக்கம் செய்யப்படுகிறான். அவனது காதலியும் அதனால் அவனை விட்டுப் பிரிகிறாள். அவன் வாழ்ந்த தோட்டத்திலும் கதிரின் குடும்பத்திற்கு இருந்த மரியாதை பறிபோகிறது. கடந்த காலத் தீயசெயல்களால் அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. இறுதியில் வாகனங்களுக்குக் கடனை முறையாகச் செலுத்தாதவர்களின் வாகனங்களைப் பறிமுதல் செய்யும் வேலையே கிடைக்கிறது. இது போன்ற தொழிலில் சில வேளைகளில் வாகன உரிமையாளர்களின் எதிர்ப்பு இருக்கும். அதனைச் சமாளிக்கக் கதிர் போன்ற பின்புலம் உள்ளவர்களே தேவை என அதன் உரிமையாளர் கதிரிடம் தெரிவிப்பது கதிரின் எதிர்காலம் வெளிவர முடியாத வளையத்திற்கும் சிக்கியுள்ளது என்பதை இத்திரைப்படம் சித்தரிக்கிறது. இதுவே குண்டர் கும்பலில் ஈடுபட்டுள்ள இளையோர்களின் நிலை.

இதுவே உண்மை நிலையும் கூட. இது போன்ற குண்டர் கும்பல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பாலும் கடன் வசூலித்தல், கேளிக்கை மையங்களில் பாதுகாவலர்களாகப் பணியாற்றுதல், சட்டவிரோத மோட்டார் சைக்கிள் பந்தையத்தில் ஈடுபடுதல், பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல் போன்ற தொழில்களில்தான் ஈடுபடுகின்றனர் (Hagedorn, 2001).

இத்தகையோருக்கு வீட்டிலும் மரியாதை இருப்பதில்லை. கணவன் மனைவியரிடையே பிரிவு. பெற்றோர்களிடத்தே வெறுப்பு. தம்பி தங்கையர் மதியாமை போன்ற நிலையே இவர்களின் குடும்ப வாழ்க்கையாகிறது. கதிர் குண்டர் கும்பலில் ஈடுபட்டதனால் அவனது அப்பா அவனை முற்றாக வெறுத்து ஒதுக்கிவிடுகிறார். அவனது தாய் தாய்ப்பாசத்தால் தவிக்கிறாள். அவனது தம்பியோ கதிரை மதிப்பதில்லை. அண்ணன் எனும் நன்மதிப்பை இழந்ததால் கதிரால் தம்பியைக் கண்டிக்க முடியவில்லை. கண்டிப்பில்லாத தம்பியும் தவறுகள் செய்ய முற்படுகிறான். ஒரு குற்றம் மற்ற எல்லாக் குற்றங்களுக்கும் அடித்தளமிடுவது இத்திரைக்கதையில் இளையோருக்கான சிந்தனையாக முன்வைக்கப்படுகின்றது.

***முடிவுரை***

*எதிர்காலம் திரைப்படம் மலேசிய இந்திய இளையோரின் எதிர்காலம் குண்டர் கும்பல் சிக்கலினால் எவ்வாறு சீரழிக்கப்படுகின்றது என்பதை மிகத் தெளிவாகச் சித்தரிக்கின்றது. குண்டர் கும்பலில் ஈடுபடும் இளையோர் தங்கள் எதிர்காலத்தை எப்படியெல்லாம் சீரழித்துக் கொள்கின்றனர் என்பதையும் அவர்களோடு அவர்களைச் சார்ந்திருப்பவர்களும் எவ்வாறு பாதிப்படைகின்றனர் என்பதனையும் இத்திரைப்படம் மையக் கருவாகவும் இத்திரைப்படத்தின் சிந்தனையாகவும் இளையோருக்கு முன்வைக்கிறது. தவறு செய்வது என்பது மிகச் சுலபம். இதற்குக் காலம், வயது, சூழல், வாழுமிடம், சுற்றியிருப்போர் என அநேக காரணங்களை முன்வைக்க இயலும். ஆனால் அதனால் வரும் இழுக்கையும் பாதிப்பையும் அச்செயலைப் புரிந்தவர் கட்டாயம் அனுபவிக்க வேண்டும். “வினை விதைத்தவன் வினையறுப்பான் தினை விதைத்தவன் தினையறுப்பான்” எனும் பழமொழியும் இதனையே உரைசெய்கின்றது. இதனை உணர்ந்து தங்களின் வாழ்க்கையைத் தாங்களே சீர்செய்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு தனிமனிதனின் தன்கடன் ஆகும்.*

## References

Guna, K., A. (2006). *Kathal Manavaazkai, Kulanthai valarppu: sikkalum thiirvum*. Chennai: Santha Publication.

Bordwell, David & Thompson, Kristin. (2008). *Film Art*. New York: MC Graw Hill.

Creswell W., John. (2003). *Research Design Qualitative, Quantitative And Mixed Methods Approaches*. (2nd Edition). London: Sage Publication, Inc.

Denzin K., Norman & Lincoln S., Yvonna,. (2003). Introduction: The Discipline and Practice of Qualitative Research. In K., Norman, Denzin and Yvonna, S., Lincoln (Eds.), *Collecting And Interpreting Qualitative Materials*. London: Sage Publication, Inc.

Goudlad, J., S., R. (1971). *A Socialogy of Populoar Drama*. London: Heinemann.

Hagedorn, John M., (2001). Gang. In *World Book* (Vol. 8, pp. 26). USA: World Book Inc.

Howell, Kerry E. (2013). *An Introduction To The Philosophy Of Methodology*. Singapore: Sage Publication, Inc.

Jesuthas. (2010). *Cerpen-Cerpen Karya M.Shanmugasiva: Satu Kajian Tema Dan Struktur*. (Disertasi Ijazah Sarjana yang tidak diterbitkan). Universiti Malaya.

Mccarthy, Thomas. (1978). *The Critical Theory Of Jurgen Habermas*. London: Hutchinson & Co, Ltd.

Melissa Freeman. (2008). Hermaneutics. In M., Given Lisa (Ed.), *The Sage Encyclopedia of Qualitative Research Methods*. (Vol. 1, pp. 385-388). London: Sage Publication, Inc.

Merrian, B., Sharan. (2009). *Qualitative Research A Guide To Design And Implementation*. San Francisco: A Wiley Imprint.

Michael Pyan & Melissa Lenas. (2012). *An Introduction to Film Analysis*. New York: Continuum.

Paul Madsen, Roy (1973). *The Impact of Film, How Ideas Are Communicated Through Cinema And Television*. New York: Macmillan Publishing Co. Inc.

Ragu Nelligan. (2002). *Gengsterisme Di Kalangan Pelajar India Di Sekolah Menengah: Satu Kajian Kes di Petaling Jaya, Selangor*. (Latihan Ilmiah yang tidak diterbitkan). Universiti Malaya.

Sabitha Marican. (2005). *Kaedah Penyelidikan Sains Sosial*. Petaling Jaya: Pearson Prentice Hall.

Stephenson, Ralph & Phelps, Guy. 1965. *The Cinema As Art.* London: Penguin Books.

Zygmunt Bauman. (1978). *Hermeneutics and Social Science Approaches to Understanding*. London: Hutchinson & Co, Ltd.
http://ww1.utusan.com.my
http://www.sinarharian.com.my